திருவேற்காடு நகராட்சி

அவசரக் கூட்டம்

திருவேற்காடு நகராட்சியில் 2024–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05ம் நாள் திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி மன்ற கூடத்தில் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட தீர்மான நகல்.

## பொருள் எண்.1

திருவேற்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 18 வரை உdar பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வெளிக்கொணர்வு முகமை மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.3353/2022/EA2–SWM–10, நாள்:10.01.2023– வழங்கப்பட்டு, இவ்வலுவலக பணி உத்தரவு நாள்.14.06.2023–ன்படி M/s.அவர்லேண்ட் என்ஜினியரிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிட் என்ற நிறுவனத்திற்கு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால் மேற்படி நிறுவனம் பணி உத்தரவு. ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை முறையாக பின்பற்றாமலும், தூய்மை பணிகள் சரிவர மேற்கொள்ளப்படாமலும், நாளொன்றுக்கு அனுமதிக்கப்பட்ட 227 பணியாளர்களில் சராசரி 60 பணியாளர்கள் தினசரி குறைவான வருகை. வாகனங்களை முறையாக பராமரிப்பு செய்யாதது. பழுதடைந்துள்ள வாகனங்களை பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளாதது, பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்காதது. திடக்கழிவுகளை வீடுகள் தோறும் தரம் பிரித்து வாங்குவதற்குத் தேவையான Bins வழங்காதது. பணியாளர்களுக்கு முறையாக EPF. ESI செலுத்தாதது. KPI நடைமுறைகளை முறையாக பின்பற்றாதது. வீடு வீடாக சென்று குப்பைகளை தரம் பிரித்து வாங்கி நுண்ணுார் செயலாக்க மையங்களுக்கு (MCC) அனுப்பாதது, சாலைகளில் ஆங்காங்கே தேக்கமடைந்துள்ள மொத்த கழிவுகளை (GVP) கொண்டு வந்து கோலடி என்ற இடத்தில் மொத்தமாக கொட்டி விட்டுச் செல்வது மற்றும் அனுமதிக்கப்பட்ட அளவினை விட திடக்கழிவுகளை குறைவாக கையாளுவது தொடர்பான குறைபாடுகளை நிவர்த்தி செய்ய கோரி பலமுறை நேரிடையாகவும் மற்றும் அறிவிப்புகள் வாயிலாகவும் தெரிவித்தும். எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் உள்ளது.

இதனால் உயர் அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள், ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகள் வாயிலாக தொடர்ச்சியான புகார்கள் மற்றும் விமர்சனங்கள் நகராட்சிக்கு தொடர்ந்து வந்தவண்ணம் உள்ளதால், நகராட்சிக்கு அவப்பெயரும் மற்றும் பொது சுகாதாரப் பணிகளில் தொடர்ந்து சுணக்கமும் ஏற்பட்டு வருகிறது.

மேலும், மேற்படி தனியார் நிறுவனத்தின் சார்பாக பொறுப்பான நபர் ஒருவரும் நியமனம் செய்யாததால் அந்நிறுவனத்தின் மூலம் நியமனம் செய்யப்பட்ட தூய்மை பணி மேற்பார்வையாளர்கள் முறையாக தூய்மை பணியாளர்களின் பணிகளை சரிவர கண்காணிப்பதில்லை. நகராட்சி நிர்வாகத்தின் மூலமாக எந்தவொரு உத்தரவு பிறப்பித்தாலும் அவற்றை முறையாக பின்பற்றாமல் மிகவும் அலட்சிய போக்குடனும். நிர்வாகத்திற்கு எவ்வித ஒத்துழைப்பும் தர மறுக்கிறார்கள்.

மேலும், ஒப்பந்த நிபந்தனைகளுக்கு மாறாக திடக்கழிவுகளை தரம் பிரிக்காமல் கோலடி என்ற இடத்தில் மொத்தமாக தேக்கி வைக்கப்பட்டு, அக்கழிவுகளை ஆப்பூர் என்ற பகுதியில் உள்ள உரக்கிடங்கிற்கு கொண்டு செல்ல லாரி வாடகையாக நடை ஒன்றுக்கு ரூ.15000/– வழங்குமாறு கோரி

21.10.2024 அன்று மனு அளித்துள்ளார்கள். இக்கோரிக்கையானது ஒப்பந்த நிபந்தனைகளுக்கு முரணானதாகும்.

எனவே, திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதார பணிகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளை சரி செய்யும் பொருட்டும். மேற்படி திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டு வரும் M/s. அவர்லேண்ட் என்ஜினியரிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிட் என்ற நிறுவனம் முறையாக பணிகள் மேற்கொள்ளாமலும், நகராட்சி நிர்வாகத்திற்கு போதிய ஒத்துழைப்பு வழங்காமல் உள்ளதாலும், நிர்வாக நலன் கருதி மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்திரவினை ரத்து செய்யவும். புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி மறு ஒப்பந்ததாரர் நியமனம் செய்து வெளிகொணர்வு முறையில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள உரிய அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கருத்துரு அனுப்பவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.761**

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

## பொருள் எண்.2

திருவேற்காடு நகராட்சி வார்டு எண்.1 முதல் 9 வரை உள்ள பல பகுதிகளில் உள்ள சாலை மிகவும் பழுதடைந்து மேடு, பள்ளமாக உள்ளது. மேலும், தற்போது மழை பெய்ததின் காரணமாக தாழ்வாக உள்ள பல பகுதியில் சாலைகள் பழுதடைந்துள்ளது. இதனால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, பொதுமக்கள் நலனை கருதி சாலைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக செய்ய வேண்டியதின் அவசியம் கருதி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கும், உத்தேச மதிப்பீடு தொகை ரூ.18.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி பணிக்காக செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

---

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.762**

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

## பொருள் எண்.3

திருவேற்காடு நகராட்சி வார்டு எண்.10 முதல் 18 வரை உள்ள பல பகுதிகளில் உள்ள சாலை மிகவும் பழுதடைந்து மேடு, பள்ளமாக உள்ளது. மேலும், தற்போது மழை பெய்ததின் காரணமாக தாழ்வாக உள்ள பல பகுதியில் சாலைகள் பழுதடைந்துள்ளது. இதனால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, பொதுமக்கள் நலனை கருதி சாலைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக செய்ய வேண்டியதின் அவசியம் கருதி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கும், மதிப்பீடு தொகை ரூ.19.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி பணிக்காக செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும்

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 763**

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.4

திருவேற்காடு நகராட்சி 28.50 ச.கி.மீ பரப்பளவும், 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 62289 மக்கள் தொகையும், (தற்போதைய மக்கள் தொகை 116216), 18 வார்டுகளை கொண்ட சிறப்பு நிலை நகராட்சியாகும்.

இந்நகராட்சியில் மொத்தம் 1448 தெருக்களும், 182.864 கி.மீ நீளம் சாலைகளும், 39.01 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய்கள் அமைந்துள்ளது. இந்நகராட்சி சென்னை பெருநகர மாநகராட்சி எல்லையை ஒட்டி அமைந்துள்ளதால், நகரம் மிகவும் வேகமாக வளர்ச்சி பெற்று வருகின்றது. இங்கு அடுக்குமாடி குடியிருப்புகள், புதியதாக உருவாகியும் புதிய மனைப்பிரிவுகளும், அமைக்கப்படுவதாலும் மக்கள் தொகை எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டு வருகிறது.

இந்நிலையில் இந்த நகராட்சியின் ஏறக்குறைய மையப்பகுதியில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சுமார் 5.50 கி.மீ நீளத்திற்கு கூவம் ஆறு கடந்து செல்கிறது. அவ்வாறு இருந்தும் போதிய மழைநீர் வடிகால்வாய் வசதி இல்லாததால் ஒவ்வொரு ஆண்டும், பருவமழை காலத்தில் மழைநீர் வெளியேற வழிவகை இல்லாததால், சுமார் நான்கு முதல் ஐந்து அடி உயரத்திற்கு மேல் குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் சூழ்ந்து பொதுமக்கள் நான்கைந்து நாட்களுக்கு மேல் வீடுகளை விட்டு வெளியேற வழியில்லாத சூழ்நிலை ஏற்படுகிறது. இதன் காரணமாக பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

கடந்த 2023-ம் ஆண்டு ஏற்பட்ட மிக்ஜாம் புயல் பெருமழை காரணமாக ஒரு வாரத்திற்கு மழைநீர் தேங்கி பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர் என்பதையும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், ஒவ்வொரு ஆண்டும் பருவமழை காலத்தில் மழைநீரை வெளியேற்றும் பொருட்டு தற்காலிகமாக மோட்டார்கள், இதர உபகரணங்கள் பயன்படுத்தி மழைநீர் வெளியேற்றும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதால், நகராட்சிக்கு ஆண்டுதோறும் அதிகளவில் செலவினம் ஏற்படுவதோடு தற்காலிக தீர்வு மட்டுமே காணப்படுகிறது.

எனவே, இப்பிரச்சனைக்கு நிரந்த தீர்வு ஏற்படுத்தும் பொருட்டும், பொது மக்கள் நலன் கருதியும் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை கழகம் (TNUIFSL) மூலம் கலந்தாலோசகர் (Consultant) நியமித்து மழைநீர் வடிகால்வாய்களுக்கான விரிவான திட்ட அறிக்கை கூவம் நதியில் சேர்ந்திடும் வகையில் தயார் செய்திடவும், விரிவான திட்ட அறிக்கை தயார் செய்திட ஆகும் செலவினத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிக்காக செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

---

**தீர்மான எண்.764**

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.5

திருவேற்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் புதியதாக நீர்மூழ்கி மின்மோட்டார் மற்றும் பல பகுதிகளில் நீர் மூழ்கி பம்புகள் பழுது அடைந்துள்ளது. இதனால், பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய முடியவில்லை. பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கோரியினை ஏற்று கீழ்க்காணும் பகுதியில் புதியதாக நீர்மூழ்கி மோட்டார்கள் மற்றும் பம்புகள் இவற்றுடன் உதிரி பொருட்களுக்குண்டான மதிப்பீடு தொகை ரூ.7.30 இலட்சத்தினை பொது நிதி / குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விவரம் | மின்மோட்டார் திறன் |
|---|---|---|---|
| 1. | 12 | வெங்கடேஸ்வரா நகர் | 5 எச்.பி |

| | | | |
|---|---|---|---|
| 2. | 2 | சுந்தர விநாயகர் நகர் | 5 எச்.பி |
| 3. | 1 | பெரியார் நகர் | 5 எச்.பி |
| 4. | 13 | மேட்டுப்பாளையம் | 5 எச்.பி |
| 5. | 3 | முருகன் நகர் | 5 எச்.பி |
| 6. | 12 | நகராட்சி அலுவலக மோட்டார் | 1 எச்.பி |
| 7. | 9 | பெரியார் நகர் பிள்ளையார் கோயில் தெரு | 5 எச்.பி |
| 8. | 2 | பவானியம்மன் கோயில் தெரு | 5 எச்.பி |
| 9. | 14 | பொதுகழிப்பிடம் | 1 எச்.பி |
| 10. | 2 | கஸ்தூரிபாய் அவென்யூ | 5 எச்.பி |
| 11. | – | பம்பு மட்டும் புதியதாக அமைத்தல். | 13 எண்கள் |

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிகளை பொது நிதி / குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்கண்ட பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.765**

**தீர்மானம் :** அனுமதிக்கப்படுகிறது.

## பொருள் எண்.6

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் பகுதிகளில் பல இடங்களில் குடிநீர் விநியோகம் சீராக செய்யாமல் உள்ளது. இப்பகுதிகளில் பொதுமக்கள் நலனைக்கருதி கீழ்க்காணும் பகுதிகளில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் அமைத்து குடிநீர் விநியோகம் செய்வதற்குண்டான மதிப்பீடு அதன் எதிரே குறிப்பிட்டுள்ளபடி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 13 | யாதவர் தெரு பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 2.30 |
| 2. | 3 | செல்லியம்மன் நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 6.00 |
| 3. | 14 | காமாட்சிபுரம் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 2.30 |
| 4. | 13 | கீரின் பார்க் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 2.30 |
| 5. | 16 | சொக்கலிங்கம் நகர் பகுதிக்கு ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 2.30 |
| 6. | 16 | ராமாஸ் என்கிளேவ் பகுதிக்கு ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 2.30 |
| 7. | 2 | கஸ்தூரிபாய் அவென்யூ பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 6.00 |
| 8. | 2 | சுந்தர விநாயகர் நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 6.00 |
| 9. | 5 | செட்டி தெரு பிரதான சாலை பகுதிக்கு ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 2.30 |
| 10. | 11 | ஐயப்பா நகர் பகுதிக்கு ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 8.50 |
| 11. | 18 | நூம்பல் அரசு பள்ளி மைதானம் பகுதியில் | 2.30 |

| | | | |
|---|---|---|---|
| | | ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | |
| 12. | 15 | புறநகர் பூங்கா அருகில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 2.30 |

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிகளை பொது நிதி / குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்கண்ட பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மான எண்.766

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

## பொருள் எண்.7

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் பகுதிகளில் பல இடங்களில் குடிநீர் விநியோகம் சீராக செய்யாமல் உள்ளது. இப்பகுதிகளில் பொதுமக்கள் நலனைக்கருதி கீழ்க்காணும் பகுதிகளில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் அமைத்து குடிநீர் விநியோகம் செய்வதற்குண்டான மதிப்பீடு அதன் எதிரே குறிப்பிட்டுள்ளபடி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 6 | வெள்ளாளர் தெரு மற்றும் மாந்தோப்பு சாலைக்கு பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 5.70 |
| 2. | 1 | நைனார் தெருவிற்கு ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 3.70 |
| 3. | 13 (ம) 15 | கீரின் பார்க் சாலை, ஆவடி பிரதான சாலை (காடுவெட்டி மருத்துவமனை), யாதவர் தெரு மற்றும் பத்மாவதி நகர் பகுதிகளுக்கு ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 9.20 |
| 4. | 17 | முகாம்பிகை நகர் பகுதிக்கு ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 2.20 |

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்கண்ட பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மான எண். 767

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.8

திருவேற்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் இருந்து பெறப்படும் குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத கழிவுகளாக தரம்பிரித்து தூய்மை பணியாளர்கள் மூலம் வாங்கப்பட்டு மக்கும் குப்பைகளை உரம் தயாரிக்கும் மையத்திலும்(MCC) , மக்காத கழிவுகளை வளமீட்பு மையம் (RRC) சேகரிக்கப்பட்டு வரப்படுகிறது. மக்காத மற்றும் எதற்கும் உதவாத கழிவுகளை சிமெண்ட் ஆலைக்கு அனுப்புவது நகராட்சியின் கடமையாகும். இப்பணியை நகராட்சியின் மூலம் செயல்படுத்தும் போது வாகன வாடகை மற்றும் எரிபொருள் செலவினம் ஏற்படுகிறது. எனவே, M/s: Sri Balaji Green Energy என்ற நிறுவனம் திருவேற்காடு நகராட்சி RRC இல் சேகரமாகக் கூடிய மக்காத மற்றும் எதற்கும் உதவாத பிளாஸ்டிக் மற்றும் இதர கழிவுகள் அவர்களது நிறுவன பணியாளர்கள் கொண்டு பண்டல் செய்து (Bailing) அவர்களது வாகனத்திலேயே எடுத்து சிமெண்ட் ஆலைக்கு கொண்டு சென்று சேர்ப்பதாகவும் தெரிவித்து, அந்நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கும்படி கடிதம் வழங்கியுள்ளார்கள். மேலும், அதற்காக சேவை கட்டணமாக டன் ஒன்றுக்கு ரூ.1000+18% GST உடன் வழங்குமாறு தெரிவித்துள்ளது. மேற்காணும் பணியினை நகராட்சி மூலம் மேற்கொள்ளும் போது கூடுதல் செலவுகள் ஏற்படும் என்பதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி இப்பணியின் அவசியத்தை முன்னிட்டு மேற்கண்ட நிறுவனத்திற்கு நகராட்சி RRC யில் உருவாகும் மக்காத கழிவுகளை கொண்டு செல்ல அனுமதியும் அதற்கான சேவைக்கட்டணம் நகராட்சி பொது நிதியில் வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.5265/2024/எச்1)

**தீர்மான எண்.768**

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

*ஒம்/–.* E. கிருஷ்ணமூர்த்தி

நகர்மன்றத் தலைவர்,
திருவேற்காடு

/உண்மை நகல்/

ஆணையர்,

திருவேற்காடு நகராட்சி.